# செங்கை ஆழியான்




# நடந்தாய் வாழி, வழுக்கியாறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தாய் வாழி, வழுக்கியாறு

★

செங்கை ஆழியான்

★

ஒரு சிரித்திரன் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சிரித்திரன் பிரசுரம்
● முதற் பதிப்பு ஜனவரி 1984

விலை: 4-00

விற்பனையாளர்:

1. ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

2 பூபாலசிங்கம் புத்தகசாலை.
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஒரு அபிமான நடிகனுக்கும் ரசிகர்களுக்குமிடையில் திரை எப்படியோ அப்படியேதான் எழுத்தாளனுக்கும் வாசகர்களுக்குமிடையில் முன்னுரை; எனது முன்னுரையாகிய நந்தியை வாசகர்கள் ''சற்றே விலகி நில்லும் பிள்ளாய்'' எனத் தட்டிவிட்டுத் தமது அபிமான எழுத்தாளனின் இலக்கியத்தைச் சுவைக்க முந்தலாம்.

''நடந்தாய் வாழி வழுக்கியாறு சித்திரன் ஆண்டு மலரில் பிரசுரமானது. ஆகவே அது புத்தகமாக வெளிவரும்போது உங்களுடைய முன்னுரையுடன் வெளிவருவதே பொருத்தமானது'' என செங்கை ஆழியான் கூறிவிட்டார்: தட்டிக்கழிக்கமுடியாத தர்மசங்கடமான நிலை; ஏதோ எழுதுகிறேன்.

செங்கை ஆழியான் தனது எழுத்து ஆளுமையால் தனக்கென்று ஒரு ரசிக சாம்பிராச்சியத்தையே உருவாக்கி எழுதுகோலோச்சிக்கொண்டிருக்கின்றார். இவரின் சாம்பிராச்சியத்தின் பிரஜை ஒருத்தியை நான் கண்ட சிறு பேட்டியை இங்கு கூறுவது பொருத்தமாயிருக்கும்;

நான் வீடு தேடும் படலத்தில் அலையாய் அலைந்த காலமது. நல்லூர் கோயில் வீதியில் ஒரு வீடு வாடகைக்கு இருப்பதாக ஒரு நண்பர் கூறினார். அங்கு விரைந்தேன். வாசலில் நின்ற ஏந்திழையாள் டீளிச்சென ''மன்னிக்க வேண்டும் வீடு கொடுத்தாச்சு'' என மின்னினாள்: அவள் கூற்று என் காதில் எட்டியதாய்ப் பாயவில்லை. இனிப்பாய்ப் பாய்ந்தது; காரணம் - ஏந்திழையாள் சித்திரன் ஆண்டு மலரை ஏந்தி நின்றாள்;

''சிரித்திரன் மலர் படித்து முடித்துவிட்டீர்களா'' எனக் கேள்விக்கணை தொடுத்தேன்.

''இப்போதுதான் ''நடந்தாய் வாழி வழுக்கியாறு'' படித்து முடித்தேன்; தரகர் மயில்வாகனமும் சண்டியன் செல்லத்துரையும் கதையை சுவாரஸ்யமாக நகர்த்துகின்றனர். கனவான் முகத்தாரின் முகமூடி கடைசியில் கிழிவது கதையைக் களைகட்டச் செய்கிறது. செங்கை ஆழியான் தனது புவியியல் அறிவை வரிந்து காட்டாது இயல்பாக இயற்கை வளத்தை விபரிக்கின்றார், சமூகவியலையும் புவியியலையும் கலந்த சுவையான கலாபாணி அவரின் படைப்புகள்'' என தனது கருத்தைக் கூறி முடித்தார்.

வீட்டுப் பிரச்சினையை மறந்து வீடு பேறு பெற்றவனின் பேரின்ப நிலையில் நின்றேன். ஒரு நல்ல வாசகியைச் சந்தித்த பரமானந்தம்;

நீண்ட காலமாக நான் அந்தகக் கவி யாழ்பாடிப் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணத்தில் ஆனைமுகத்தான் கோயில்கள் மலிந்திருப்பதன் மர்மம் என்ன என்று சிந்தித்ததுண்டு. நடந்தாய் வாழி வழுக்கியாறு படித்த பின்பு அந்த மர்மமும் துலங்கியது; அது கர்ண பரம்பரைக் கதையாக இருந்தபோதும் மனதிற்கு ஒரு நிறைவைத் தருகின்றது;

விபீஷணன் இலங்கையை ஆண்ட காலத்தில் பெருமாலியன் என்ற அரக்கன் வழுக்கியாற்றை மறித்து யாழ்ப்பாணத்தை வெள்ளத்தில் ஆழ்த்தப் பார்த்தான். அப்போது பிள்ளையார் தோன்றி அவனைக் கொன்று வழுக்கியாற்றைப் பாயவிட்டு யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றியதாக பாட்டா கூறியதாக செங்கை ஆழியான் எழுதியுள்ளார்;

சில சீவ செந்துக்கள் மாரிகாலத்தில் தோன்றி கோடை காலத்தில் மறைவதுபோல் எமது ஜீவநதியாகிய வழுக்கி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாறும் தோன்றி மறையும் இயல்புடையது: இருந்தும் மலையில்லா மண்ணில் ஒரு ஆறு மாரிகாலத்திலாவது ஓடுவது ஆறுதல் தருகின்றது. மலைப்பிரதேசங்களில் ஊற்றெடுக்கும் ''ஓயா''க்களே கோடை காலத்தில் ஓய்வெடுக்கும்போது வழுக்கியாறு கோடைகாலத்தில் முகிலாகி மாரிகாலத்தில் நதியாகினுல் என்ன?

தேம்ஸ், வொல்கா, கங்கை போன்ற நதிகள் மண்ணை மட்டும் வளம்படுத்தாது இலக்கியத்தையும் வளப்படுத்து கின்றன வழுக்கியாறும் தனது கடமையில் வழுவவில்லை உழவுக்கும் உதவி செங்கையாழியான் பேனு ஊடாகப் பாய்ந்து மண்வள இலக்கியத்தையும் வளம்படுத்தியுள்ளது.

ஒரு கையால் நாடித்துடிப்பைப் பார்த்துக்கொண்டு மறு கையால் மருந்து எழுதும் வைத்தியர் போன்றவர் செங்கை ஆழியான். மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்து பேனவை நகர்த்துபவர் அந்தத் துடிப்பின் ஆக்கங்களே அவரின் நாவல்களும் நவீனங்களும்.

விலைவாசி உயர்வு எம்மைக் குலைநடுங்கச் செய்கின்றது. சஞ்சிகைகளின் விலை தலை சொறியச் செய்கின்றது. புத்த கங்களின் விலை தலை சுற்றச் செய்கின்றது. மகுடியார் பதிலை இங்கு நினைவு கூர்வது நல்லது. ''புத்தகங்களின் விலை உயர்ந்துகொண்டு போகின்றது... ஏழைகள் வாசிப்ப தில்லையா?'' என்ற கேள்விக்கு மகுடியார் அளித்த பதில் சிந்திக்கச் செய்கின்றது. ''பியானே'' ஒரு பணக்காரவீட்டு வாத்தியம். ஏழை வாசிக்க முடியாது; அதேபோன்று புத்தகத்தின் நிலையும் உயர்ந்துவிட்டது'' எனப் பதில் கூறியுள்ளார்.

எமது மேடை இலக்கிய இரட்சகர்கள் இலக்கியத்தைப் பாவபுண்ணிய எடை போடுவதுடன் மட்டும் நிற்காது ஏழை எழுத்தாளர்களின் புத்தகங்களையும் பிரசுரிக்கும் புண்ணிய மார்க்கம் கூறவேண்டும். இன்று பணவசதியுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களே தமது கருவைப் புத்தக உருவில் காணும் பாக்கியவான்கள்;

நீண்ட காலமாக மேடையில் பேசிக்கொண்டிருந்து விட்டோம். நாம் வீதிக்கு இறங்கிவரவேண்டும். புத்தகங்கள் புத்தகப் பண்ணைகளால் வீட்டுத் திண்ணைகளுக்கும் வர வேண்டும்.

எமது புத்தக வெளியீட்டு விழாக்கள் பிறந்ததின விழாக்கள் போலவே நடைபெறுகின்றன. உறவினரும், நண்பர்களும் மட்டும் வாழ்த்துத் தெரிவித்துப் போகின்றனர். பொதுமக்கள் கலந்துகொள்வதில்லை.

எமது வெளியீடுகள் மக்களின் வாசல்படிக்குப் போக வேண்டும். இந்தப் பாணியில் செங்கை ஆழியானுக்குப் பெரும் பங்குண்டு.

''சிரித்திரன்''
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

— சுந்தர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"....நாவல் சிறுகதைகளை விட அவர் வழுக்கியாறு பற்றி எழுதிய சித்திரமும் போற்றக்கூடியதே. யாழ்ப்பாண மாதா மலடி என்று பெயர் கேளாமல் சத்திரசிகிச்சை மூலம் பெற்றெடுத்த குழந்தை அது. அதைப்பற்றி யார் கவனித்தார்கள்? சிலர் ஒரு வரியில் பாடியிருக்கிறார்கள். செங்கை ஆழியான் அருமையாக சிறு நூல் அளவிற்கு நல்ல சித்திரமாகவல்லவா தீட்டியிருக்கிறார்?"

**இரசிகமணி கனக செந்திநாதன்**

('அக்கினிக்குஞ்சு' முன்னுரையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவில்
மைத்துனனாய்,
உள்ளத்தில்
நல் ஆலோசனை
கூறும் தோழனாய்
வாழ்ந்த
திரு. கே. வி. சண்முகநாதன்
அவர்களின்
நினைவிற்குச்
சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தாய் வாழி, வழுக்கியாறு!

## 1

அதிகாலையின் இதமான தூக்கத்தை என் மனைவி கலைத்தாள். அவள்மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது:

'இஞ்சேருங்கோ, எழும்புங்கோவன்...... விடிஞ் செல்லோ போச்சுது... அளவெட்டிக்கெல்லே போகவேணும் எழும்புங்கோ!'

'சும்மா கரைச்சல் கொடுக்காதையும்...... மனிசனைக் கொஞ்சநேரம் நிம்மதியாகத் தூங்கவிடும்......' என்று அவள்மீது எரிந்து விழுந்தேன்;

'இராத்திரி படுக்கேக்கை என்ன சொன்னனீங்கள்..?

'என்ன சொன்னனான்...'?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இண்டைக்கு அப்பு, ஆச்சி, ஐயாவைப் பார்க்க அளவெட்டிக்குக் கூட்டிக்கொண்டு போறதென்றெல்லே சொன்ன நீங்கள்'

'ஓமோம்... சொன்னன்... அதுக்கு இப்ப என்ன? ஆம்புளையள் இரவிலே உங்களுக்குச் சொல்லுகிற எல்லாத்தையும் உண்மையெண்டு எடுக்கக்கூடாது...!' என்று கூறிவிட்டுச் சிரித்தேன்.

என் மனைவிக்குக் கோபம்; பெண்கள் கவலையையும் கோபத்தையும் காட்டுவது கண்ணீரால்தான்; அழுதபடி குமுறிக்கொட்டினுள்.

'என்ரை ஊர்சனத்தைவிட்டு உங்களை நம்பி இங்கை வந்தன்... என்னை இந்தக் காட்டுக்கை அனுதைபோல வைச்சிருக்கிறியள்; கடைசி ஒரு மாசத்திலை ஒரு நாளைக்காவது என்ரை அப்பு, ஆச்சி, ஐயாவைப் பார்க்கக் கூடாதே...?'

'யாழ்ப்பாண ரவுன் உமக்குக் காடாகத் தெரியுது... அளவெட்டி உமக்கு ரவுனுகத் தெரியுது...! உம்மை நானே மறிச்சனுன்... உமக்கு விருப்ப மெண்டால், உம்முடை ஆக்களோடை போய் இரும்...'

'இரக்கமில்லாத மனிசர் நீங்கள்...'

'ஆண்களே அப்படித்தான்.'

'நான் அளவெட்டிக்குப் போய் தங்கிவிட்டால் இங்கை கடைச் சாப்பாடு சாப்பிடலாம் என்று பாக்கிறியள்...'

'கடைச் சாப்பாடு பிடிக்காட்டி வீட்டுச் சாப்பாட்டிற்கு வாறன்...' என்று சிரித்தேன். என் சிரிப்பின் அர்த்தத்தை என் மனைவி புரிந்து கொண்டாள்:

'மேயிற சாதி...!'

'உம்முடைய ஐயாவை விடவோ...?'

புலிபோலச் சீறினுள், என்மனைவி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவரைப்பற்றி ஒன்றும் சொல்லாதையுங்கோ......
எனக்கு நாலு வயது நடக்கும்போதே அம்மா செத்துப் போனா: அதுக்குப்பிறகு கண்ணைப்போல என்னை வளர்த்து ஆளாக்கியவர் என்ரை ஐயாதான்... அப்புவும் ஆச்சியும் ஐயாவை இன்னொரு கலியாணம் செய்யச் சொல்லிக் கேட்கவும் எனக்காக மறுத்துப்போட்டு இருந்தவர்...'

'கொக்கர் சண்முகத்தாரை பற்றி நீர் எனக்குச் சொல்கிறீர்.. உன்ரை கொப்பர் ஆடின ஆட்டம் பெருமாகடவைப் பிள்ளையாருக்கு தெரியும்...! இப்பதான் ஒய்ஞ்சிட்டிருக்கிறார்...! கட்டினவனுக்கு ஒரு பெண்டில் கட்டாதவனுக்கு ஊரெல்லாம் பெண்டில்...

'ஓ'வென்று அழுதாள் என் மனைவி.

'ஏன் இப்பிடி ஐயாவைத் தூற்றுகிறியள்...? அவர் உங்களுக்கு என்ன கெடுதி செய்தவர்? அவையள் தங்கடை செடியிலை இப்பவும் இருக்கினம்...! உங்களுக்குப் பாரமா இருக்கினமே? இண்டைக்கும் அளவெட்டியிலை இருந்து நெல்லா காசா எங்களுக்கு எவ்வளவு வருகுது! ...'

'சரி சரி அழாதையும்... போய் வெளிக்கிடும் போவம்... பிள்ளைத்தாச்சி அழக்கூடாது...'

என் மனைவியின் முகத்தில் நாணமும் மகிழ்வும் படர்கின்றன. குமரிபோலத் துள்ளி ஓடுகிறாள்.

## 2

பெருமாகடவைப் பிள்ளையார் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கின்றார்: அவர் ஆலயத்தின் முன்னால் செந்நெல் கொழிக்கும் வயல்வெளி பரந்து கிடக்கின்றது; பின்னால் விவசாயிகளின் குடியிருப்புக் காணிகள் நெருங்கிக் கிடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன; அளவெட்டி தெற்கில், எழிற்சூழலின் பிள்ளையார் கோயில் அமைந்திருக்கின்றது, உற்சவங்கள் நடைபெறு கின்ற ஆலயந்தான்.

பிள்ளையார் கோயிலிற்கு மேற்கேதான் எனது மாமன் கொக்கர் சண்முகத்தாரின் வீடு இருக்கின்றது.

நாங்கள் கோயிலின் முன் காரிலிருந்து இறங்கினோம்: சற்றுமுன்தான் பிள்ளையார் கோயில் உதய காலைப் பூசை முடிந்திருந்தது. என் மனைவி பிள்ளையாரை வணங்கினாள்; அவள் முகத்தில் மகிழ்ச்சி.

'இந்தக் கோயில் வீதியெல்லாம் நான் சிறுமியாக இருந்தபோது ஓடித்திரிந்திருக்கிறேன். அதோ, ஒரு குளம் தெரிகிறதே பிணுக்கைக்குளம்... அக்குளக்கட்டெல் லாம் பொழுதுபோவதே தெரியாமல் திரிவேன்... அக்குளத் திற்கு வலதுபக்கத்து வயல் எங்களுக்குரியது... என் அப்பு வும் ஐயாவும் கலப்பை மாடுகளுடன் அதிகாலை வேளை களில் வயலுக்கு வருவார்கள்... நானும் வருவேன்... என் னைத் தூக்கித் தோளில் இருத்திக் கொண்டே என் அப்பு வயலை உழுவார்'... என் மனைவியின் விழிகளில் இளவயதுக் கனவுகள் மிதக்கின்றன. இளமை நினைவுகள் இனிமையான வைதான்.

பெருமாகடவைப் பிள்ளையாரின் விழிகள் நிலைக்கின்ற இடத்தில், பிணுக்கைக்குளம் விரிந்து கிடக்கின்றது; மாரி காலத்தில் இக்குளம் நீரால் நிரம்பி வழியும். இக்குளத்தைச் சுற்றியுள்ள வயல்களுக்குப் போதிய நீரை அக்காலத்தில் இக்குளம் வழங்கும்; மேலதிக நீர் தென்புறமான சிறு நதி ஒன்றின் ஊடாகக் கடலை அடைகின்றது. அந்நதிதான் யாழ்ப்பாணத்தின் ஒரே ஆறு! எழில் ஆறு—

வழுக்கி ஆறு...!

என் மாமன் சண்முகத்தாரின் தந்தை ஐயம்பிள்ளைக் கிழவர் உண்மையான ஒரு கமக்காரர்; இன்று அவர் உடல் தடதடத்துக் கண்களும் சிறிது மங்கிவிட்டன. நேர்மைக் குப் பயந்த மனிதர் அவர். அவர் அடிக்கடி கூறுவார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தம்பி மோனை .. உந்த அகத்திய முனிவர் காவேரி நதியைக் கமண்டலத்திலே அடைச்சு வைத்திருந்தார்... விநாயகர் காக உருவில் பறந்து சென்று கமண்டலத்தைக் கவிழ்த்து விட, காவேரி நதி பொங்கிப் பெருகிப் பாய்ந்தது... அதைப் போலத்தான் உந்த வழுக்கியாறும்...! உவன் விபீசணன் இலங்கையை ஆண்ட காலத்திலே, பெருமாலியன் என்ற ஒரு அரக்கன் வழுக்கியாற்றை மறிச்சு யாழ்ப்பாணத்தை வெள்ளத்துக்குள் ஆழ்த்தப் பார்த்தான்... அப்ப, பிள்ளையார் வந்து அவனைக் கொன்று வழுக்கியாற்றைப் பாய விட்டார்... பிறைக்கைக் குளத்திலே தான் பெருமாலியன் மறிச்சபோது நீர் தேங்கினது... அக்குளத்துக்குப் பக்கத்திலேயே பிள்ளையாரும் இருந்திட்டார், காவலாக...! அவர்தான் பெருமாகடவைப் பிள்ளையார் ..!'

உண்மை பொய் எதுவோ...? பிறைக்கைக் குளத்தில் மழை காலத்தில் ஊர் வெள்ளம் எல்லாம் நிறைகின்றது; அதனால், மழைகாலத்தில் வழுக்கியாறு பொங்கிப் பெருகி நடக்கின்றது!

'வாங்க, போவம்...' என்று அழைக்கிறாள் மனைவி.

# 3

எனது மாமனாரின் வீட்டை அடைந்தபோது, என் மனைவி பயந்து போனாள். பனையோலையால் வேய்ந்த சிறு வீடு அது. அந்த வீட்டின் முன் திண்ணையில் எதையோ பறி கொடுத்தவர்போலக் கொக்கர் சண்முகத்தார் இருந்தார். பக்கத்தில் அப்பு நின்றிருந்தார். மலையே பிரண்டாலும் சண்முகத்தார் அசையக் கூடியவரல்லர்.

'உன்ரை ஆச்சி முடிஞ்சிட்டாபோல இருக்குது..! கொப்பர் இடிவிழுந்துபோய் கிடக்கிறார்... அப்பு பிரமை பிடிச்சு நிக்குது...' என்றேன், நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐயோ... என்ரை ஆச்சி...!' என்று கதறியபடி பாய்ந்து ஓடினுள், என் மனைவி. என் மனைவி கத்திய சத்தத்தைக் கேட்டு. சண்முகத்தார் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார்.

'ஏன் பிள்ளை, என்ன?...... என்ன நடந்தது?...' என்று பதறிப்போய் எழுந்தார்.

'உதார்... ஞானமோ!...' என்று திரும்பினுர் அப்பு.

'ஆச்சிக்கு ஒன்றுமில்லையே?... என்று விம்மினுள், மனைவி.

'எனக்கு ஒன்றுமில்லைப் பிள்ளை, நான் நல்லாத்தான் இருக்கிறன்...' என்றபடி குசினிக்குள் இருந்து ஆச்சி, மூக்குப் பேணியும் தேநீருமாக வெளியே வருகின்ருள்.

என் மனைவி என்னைக் கோபத்தோடு பார்க்கிருள். நான் பனைமரத்து வட்டு ஒன்றைப் பார்க்கின்றேன்; பனை வட்டில் முட்டிகள் தொங்குகின்றன.

என் மனைவி கத்திய கத்தில் பலர் கூடிவிட்டார்கள்.

'ஏன் என்ன நடந்தது?... பிள்ளையேன் யாழ்ப்பாணத் திலை இருந்து அழுதபடி வந்தது? புரியன் அடிச்சுத் திரத்திப் போட்டானே?' என்று வந்தவர்கள் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தார்கள்.

'ஒரு கோதாரியுமில்லை...' என்ருள், ஆச்சி.

'ஒன்றுமில்லாமலே, ஐயா இப்படி இருந்தவர்?' என்று என்மனைவி கேட்கிருள்.

'உன் கொய்யா சவாரிக்கு என்று வளர்த்த மாடுகளிலே, வடக்கன் சிவலையை ராத்திரித் தொடக்கம் காணேல்லை... ஊரெல்லாம் தேடிப்போட்டு வந்திருக்கிருன்... எந்தப்படுபாவி, கொண்டு போனுனே?... போக் கறுந்து போவான்கள்...' என்று ஆச்சி திட்டினுள்! 'டேய் தம்பி சண்முகம், விடியத்தொடக்கம் தண்ணிவெண்ணி இல்லாமல் இருக்கிருய்...? வடக்கன் சிவலை எங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறது... இங்கினேக்கைதான் நிக்கும்... நீ இந்தத் தேத் தண்ணியைக் குடி, ராசா......'

'ஆச்சி, என்னைத் தொல்லைப்படுத்தாதை...! சுன்ன கத்துச் சுப்பிரமணியனைச் சவாரியிலை செயிக்கிறதுக்காக, நான் இந்தச் சிலோன் சீமையெல்லாம் திரிஞ்சு, ஆயிரக் கணக்கிலை கொடுத்துக்கொண்டு வந்த மாடுகள்!... அதிலை வடக்கன் சிவலையைக் காணேல்லை... உதை ராத்திரி ஆரோ கொண்டுபோட்டான்கள்... இந்தச் சவாரி சண்முகத்தானை யார் என்று நினைச்சிருக்கிருன்கள்...! கொண்டு போனவங்களைச் சும்மா விடப்போவதில்லை...' என்று உறுமினுர், சண்முகத்தார்; அவரது குடும்பி குலுங்கியது; துண்டை உதறித் தோளில் போட்டார்;

தசரப்படலை விடும் சத்தம் கேட்கிறது: வந்தவர், தரகர் மயில்வாகனம்; இடுப்பில் நாலுமுழ வேட்டி; அதை இடுப்போடு இறுக்கிப்பிடிக்க முழத்துண்டு ஒன்று; கையிலை பழங்குடை;

'என்ன முகத்தார்...! நான் கேள்விப்பட்டது உண்மை தானே வடக்கன் சிவலையைக் காணேல்லையே...? எங்கை போனது...? எனக்கு இப்பதான் நினைவு வருகுது... கிழக்கு வெளுக்க முன்னம் வயலுக்குப் போனனுன்... ஒரு சிவலை-பதிந்த-மாடு பிஞக்கைக் குளத்துக்கை இறங்கினது... ஒரு வேளை வழுக்கியாற்றுக்குள்ளாலை போயிருக்கும்...' என்றுர், மயில்வாகனம்.

'மயிலு... நீ உண்மையாக் கண்டனீயே?...'

'விடியம்புறமே போடுறனுவே...? பிள்ளையார் ஆணை... கண்டனுன் என்கிறன்...!'

'வெளிக்கிடு, மயிலு...! வடக்கன் சிவலையைக் கண்டு பிடிக்காமல் விடுகிறதில்லை... வழுக்கியாற்றுக்குள்ளை தான் நிப்பார்... பிள்ளை, அந்த மாடு கட்டுற கயித்தை எடு...! மயிலு, நீபோய் ஒருக்காச் செல்லத்துரையைக் கூட்டிவா...!' என்கிறுர் முகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆரை...? சண்டியன் செல்லத்துரையையே?... அவன் ஏன்...?' என்று தரகர் தயங்குகிறார்.

'அவனும் வரட்டும்... எனக்கு ஒருத்தரிலை சந்தேக மிருக்கு!... எதுக்கும் செல்லத்துரையனும் வரட்டும்...'

'அவன் அடிதடிக்காறன்...' என்கிறார், மயில்வாகனத் தார்.

'என்ன அம்மான், என்னைப்பற்றிக் கதை நடக்குது... தரகர் என்ன சொல்லுறார்...!' என்றபடி சண்டியன் செல்லத்துரை வருகின்றான். முறுக்கேறிய உடம்பு.

'ஒன்றுமில்லைத்தம்பி .. முகத்தாற்றை மாடு பிடிக்கப் போறம்.. அதுக்கு உன்னையும் கூட்டிப்போவம் எண்ட னான்...' என்று தரகர் சிரிக்கிறார்.

'டேய் சண்முகம், மாடு பிடிக்கப்போய் வீண் சண்டை கிண்டை பிடிக்கிறதில்லை... என்கிறார், அப்பு.

'தம்பி, அப்பையனையும் கூட்டிக்கொண்டு போங்கோ...! நீதி நியாயம் தெரிஞ்சவன்...! ஆராவது இவனைப் பிடிச் சுக்கட்டி வைச்சிருந்தாலும் சண்டைக்கு போகாமல், அவிட்டுவந்திடு மோனை... காலம் கலிகாலம்...' என் கிறாள், ஆச்சி.

'நீங்களும் கூடப்போங்களேன்...!' என்று என்னிடம் கெஞ்சுகிறாள், என்மனைவி.

— எங்கள் பிரயாணம் ஆரம்பமாகின்றது.

## 4

பெருமாகடவைப் பிள்ளையார் கோவிலில் இருந்து இருநூறுயார் தூரத்தில் பிணைக்கைக் குளம் உள்ளது. வயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்புகளூடாக அக்குளத்தை நோக்கி நடந்து போனேம்; சண்முகத்தார் வேகமாக விரைந்து போனார்.

'தம்பி, தரகரின் வார்த்தையை நம்பி காளையைத் தேடுவது அர்த்தமற்றது... நம்பக்கூடாதவர்களில் தரகர் மயிலரும் ஒருவர்... கெட்டமனுசன்! நம்பினவர்களையே கழுத்தறுக்கிறசாதி...' என்றுன், செல்லத்துரை.

'அப்படிச் சொல்லக்கூடாது...' என்றுர், அப்பையா; ஊர் அப்புக்காத்து என்றுல் அப்பையாவைத் தெரியாத



'மூத்தார்...'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் இருக்கமுடியாது... 'மனிசரிலே நல்லவன் கெட்டவன் என்று இல்லை, செல்லத்துரை! எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலையால் வாறது... மயிலு உனக்குச் செய்து வைத்த சம்பந்தம் சரியில்லை என்றதுக்காக நீ அந்த மனிசனை சப்பித் துப்புறுய்...? தாரமும் குருவும் தலைவிதி அப்பா...!'

'மயிலற்றை கூத்துக்களை உங்களுக்கு என்ன தெரியும்... சண்முகத்தார் அம்மானையும் கெடுத்தது மயிலர்தான்... விடிய எழும்பினதும் மயிலர் முகம் கழுவுறதே பனங்கள்ளிலேதான்... உவனுக்கு என்னுலேதான் சா, ஒருநாளைக்கு...' என்று பொரிந்து தள்ளினுன் செல்லத்துரை.

பிறுக்கைக் குளக்கட்டில் ஏறி நின்ருேம்; கிழக்கு மேற்காக அரைமைல் வரை நீண்டு கிடக்கிறது, குளம். குளத்திலே நீர் குறைவு; இருபதடி அகலத்தில் குளத்தின் உள் இரு கரைப்பகுதியிலும் நீர் தேங்கி நிற்கின்றது; மத்தியில் ஆங்காங்கே குண்டுகுண்டாக நீர்த்தேக்கம். மற்றப்படி குளத்தின் படுக்கையில் பசும்புல் வளர்ந்து கிடக்கின்றது.



'... முக்கியாற்லை மாடு போனது.....' ...தரகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகத்தார் குளக்கட்டில் நின்றபடி சுற்றும் முற்றும் பார்க்கின்றார். கண்ணுக்கு எட்டிய தூரம் வயல்வெளி. ஆங்காங்கே கலப்பைகள் வயலை உழுது கொண்டிருந்தன. வயல்களுக்கு அப்பால் பனைமரங்கள் மண்டிக்கிடந்தன.

'பிள்ளையாரே, என்ரை சிவலை கிடைச்சிட வேணும்... உனக்கு வாற வெள்ளிக்கிழமை பொங்கிப் படைப்பன்...' என்று குளக்கட்டில் நின்றபடி சண்முகத்தார் வேண்டிக் கொண்டார்.

'அதோ, பாருங்கோ அம்மான்!...' என்று செல்லத்துரை சுட்டிக்காட்டினான்.

பிருக்கைக் குளத்தின் வடகரையில் மாடுகள் பல சேர்ந்து நிற்பது தெரிந்தது.

'பங்கை பார்... அதுகளுக்கை நம்மடை சிவலையும் நிக்குது போலை...' என்று கூச்சல்போட்டார் மயிலர்.

எல்லாரும் படபடவென குளத்தினுள் இறங்கி, மறு கரையை நாடி ஓடினேம். தேங்கிநின்ற நீர் கணுக்காலை யும் மூடிச் சற்று உயரவே போதுமானது.



...ரமுத்தா
...ட்டுப்பிடிக்
கிற...'

சண்முகத்தாரும் மயிலரும் பாய்ந்து ஓடினார்கள்; செல்லத்துரையும் விரைந்து போனான். நீரில் நின்றபடியே கரைக்கட்டில் நின்ற மாடுகளை முகத்தார் பார்த்தார்.

'உந்தா நிக்குது .' என்றபடி தரகர் விரைந்து பாய்ந்தார்.

சேறு படிந்து இருந்த கரையில் ஆவேசத்தோடு கால் பதித்த தரகரால் சமாளிக்கவே முடியவில்லை. 'சர்'ரெனச் சறுக்கி விழுந்தார். நீரில் அரைவாசி உடம்பும் நிலச்சேற்றில் அரை உடம்பும் கிடந்தது.

'ஐயோ...' என்று வீரிட்டார், மயிலர். 'கோதாரி விழுவான்ரை குளம்..! சறுக்கிப்போட்டுது... இண்டைக்குக் கட்டின வேட்டி... நாசமாப்போச்சுது...!'

'வெறியே!' என்று சிரித்தான், செல்லத்துரை.

'கொதியைக் கிளப்பாதை...' என்றார் தரகர்.

ஆட்காட்டி குருவிகள் கூச்சலிட்டபடி பறந்தன. குளத்தின் கரையில் அமைந்திருந்த ஐந்து மதகுகள் ஒன்றில் அமர்ந்திருந்த பருந்து ஒன்று 'விர்'ரென்று வானில் எழுந்தது.

சிவலையைக் காணேம்.

முகத்தாரின் முகத்தில் கவலைக்குறிகள் படர்ந்தன.

'வீணுகக் கவலைப்படாதை... மாடு எங்கையும் போயிராது .. இங்கினேக்கைதான் நிக்கும்... வழுக்கி ஆற்று வாய்க்காலைப் போய்ப் பாப்பம்...' என்ருர், அப்பையா.

'இஞ்சைபார், சிவலைபோன அடையாளம்...' என்று சேற்றுநிலத்தைச் சுட்டிக் காட்டினார், தரகர்.

'அடி செருப்பாலை...' என்ருன், செல்லத்துரை. 'மந்தை மேயிற குளத்திலை, குழம்பு அடையாளம் காட்டுகிருர், தரகர்..! இதென்ன தரகு வேலை என்று நினைச்சியே...?'

மரியாதைக் குறைவா கதையாதை கண்டியோ! என்னைப் பேசு, ஆனு, என்ரை தொழிலைப் பழியாதை .. கெட்ட கோபம்வரும்...' என்ருர் தரகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோபத்தை அடக்கவேணும்... பேசாமல் வாருங்கோ...' என்றார் அப்பையா.

குளத்தின் ஊடாக, தென்கிழக்கு மூலைநோக்கி நடந்து போனோம். தென்கிழக்கு மூலையில்தான் வழுக்கியாறு, பிணுக்கைக் குளத்தைவிட்டு வெளியேறுகிறது. தூரத்தில், குளத்தின் வடகிழக்கு மூலையில் துணி துவைத்தபடி பலர் நிற்பது தெரிந்தது.

புரட்டாசி மாதம். சோளகக் காற்று வறட்சியோடு வயல்களைத் தழுவிக் குளத்தினுள் வேகமாக வீசியது. ஒரு கையில் குடையை அலட்சியமாகப் பிடித்தபடி, செல்லத் திரையை மெதுவாகத் திட்டியபடி மயிலர் வந்தார். குடைபிடித்த பக்கம் காற்று வீசிய பக்கத்துக்கு எதிராக இருந்ததால் திடீரெனக் குடை விரிந்தது. விரிந்த வேகத்தில் தரகரின் கையில் பிடியைக் கழற்றிவிட்டு, காற்றில் எழும்பியது.

'ஐயோ... ஐயோ... என்ரை குடை... என்ரை குடை பிடியடா தம்பி, பிடியடா...!' என்று கத்தியபடி தரகர்



'உப்புக்குளத்தில் அப்பையர், முகத்தார், தரகர்'

குடைக்குப் பின்னுல் பாய்ந்து ஓடினுர். நானும் ஓடிப் போய் குடையைப் பிடித்தேன்.

செல்லத்துரை விழுந்து விழுந்து சிரித்தான்.

'இந்த அறுவான் ஏன் சிரிக்கிருன்...' என்ருர் மயிலர்.

'யாற்ரு அறுவான...!' என்றபடி செல்லத்துரை தரகர் மேல் பாய்ந்தான். நான் குறுக்கே பாய்ந்து செல்லத்துரையைக் கட்டிப் பிடித்தேன். கொக்கர் சண்முகத்தார் இருவர் இடையேயும் புகுந்து விலக்கி விட்டார்.

மயிலரின் உடல் 'வெட வெட' என நடுங்கியது.

'சண்டை பிடிக்கவே வந்தனீங்கள்... கொழுத்தாடு பிடிக்கிற தென்ருல் இரண்டு பேரும் வரவேண்டாம்...' என்ருர் சண்முகத்தார்.

# 5

பீருக்கைக் குளத்தின் தென் கிழக்கு மூலேயினின்றும் வழுக்கியாறு தோற்றம் பெறுகின்றது. நாங்கள் மாடு தேடிப் புறப்பட்ட காலம் ஆவணிமாதக் கடைசி ஆகும். சோளகக் காற்று தனது இறுதி வறட்சியை வேகத்தோடு தருகின்ற காலம்.

வழுக்கியாற்றின் படுக்கை வறண்டு கிடந்தது; வழுக்கியாறு வறண்டு கிடந்தது போலவே வழுக்கியாற்றின் இருமருங்கும் கண்ணுக்கு எட்டியதூரம்வரை விரிந்து கிடந்த வயல் வெளிகளும் புழுதியைப் பரப்பியபடி கிடந்தன. கிணறுகளையுடைய வயல் துண்டுகள் சிலவற்றில், பூசணி, வெள்ளரிக் கொடிகள் காய்ந்துகிடந்தன. ஆனி, ஆடி மாதங்களில் இக்கொடிகளில் பூசணி, வெள்ளரிக் காய்கள் சிலிர்த்துக் கிடக்கும். இப்போதும் பொய்ப் பிஞ்சுகள் சில அக்கொடிகளில் கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கியாற்றின் படுக்கையில் புற்களும் முட்செடிகளும் பரவிக்கிடந்தன.

நாங்கள் ஆற்றுக் கால்வாயின் இருபக்க வரம்புகளினூடாக நடந்து போனோம். வயல்களில் பல மாடுகள் நின்று மேய்ந்து கொண்டிருந்தன. ஆனால், சிவலைக் காளையைக் காணோம்.

'நீ முந்தநாள் ஆவரங்கால் கந்தையாவை... மாடு காட்டக் கொண்டு வந்தாய்... எனக்கு அப்பவே தெரியும், மயிலு!... அவன் கரிநாக்கன்...' என்றார் சண்முகத்தார்.

'முகத்தார், நீர் உப்படிக் கூறக்கூடாது... அவனுக்கு மாட்டைக் காட்டவேண்டாம் என்ற நான் கண்ணைக் காட்டினனான் .. நீர்தான் கவனிக்கவில்லை.. அது சரி, சிவலைக் காளை கட்டின கயிற்றோடு போட்டுதோ... அல்லது கயிற்றைக் கழட்டிப் போட்டுப் போட்டுதோ?...' என்று கேட்டார் மயிலர்.

'கயிற்றை அறுத்துக்கொண்டு போகேல்லை; கழட்டிக் கொண்டுதான் போயிருக்குது... அது போகக்கூடிய மாடு அல்லக் கண்டியோ?... ஆரோ, கண்வைச்சுப் பிடிச்சுத் தான் இருக்கிறான்கள்... போன வரியம், உவர் விதானையாற்றை மாட்டைக் களவாடிப் பிடிச்சு வெட்டிப் பங்கு போட்டிட்டு, வயல்கிணறு ஒன்றுக்கை மிச்சத்தைப் போட்டிட்டும் போனவங்கள்... அதைப்போல... அப்படி எதுவும் நடந்திருந்தால், அவங்களை இந்தச் சண்முகத்தான் லேசில் விடமாட்டான்...'

வெயில் மெதுவாகச் சூடேறத் தொடங்கி விட்டது. நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். ஆற்றுவரம்பில் நடப்பது என்னைப் பொறுத்தவரையில் கடினமாகவே இருந்தது. மயிலர்கூட இரண்டு மூன்று தடவை காலிடறி விழப்பார்த்தார்.

'தம்பி..!' என்று என்னை அழைத்தார் அப்பையர். 'ஐப்பசி கார்த்திகை மாதங்களில் இந்த ஆற்றைப் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும்... வெள்ளம் கரைபுரண்டு ஓடும்... வெள்ளத்துக்கு மேலால் தலையைத் தூக்கியபடி பயிர்கள் நிற்கும்!...'

வழுக்கி ஆற்றின் படுக்கை தென்புறமாக நூறுயார் வரை சென்று, பின் சற்று கிழக்குப் புறமாகத் திரும்பியது. திரும்பிய திருப்பத்தில் உயர்ந்து வளர்ந்த பற்றைக் காடு ஒன்று இருந்தது. அதன் அருகே பாழ்கிணறு ஒன்று இருந்தது.

அதனைக் கண்டதும் சண்முகத்தார் பரபரப்படைந்தார்.

'இந்தப் பாழடைந்த கிணத்துக்கைதான் விதானையாற்றை மாட்டை வெட்டிப்போட்டவன்கள்...' என்றபடி கிணற்றைநாடி ஓடினார். நாங்கள் எல்லாரும் விரைந்து ஓடிச்சென்று கிணற்றை எட்டிப் பார்த்தோம். பாழ் கிணற்றின் பொந்தொன்றில் இருந்து நல்லபாம்பொன்று தலையை உயர்த்திப் பார்த்தது.



'சந்தரோடைக் குளக்கரையில்...'

'ஐயோ... பாம்பு...' என்று அலறியபடி பின்வாங்கினார்; மெல்லிய சரிவு சமாளிக்க முடியவில்லை;

'பழி... பழி...' என்றான், செல்லத்துரை;

'பாவி... பாவி...' என்றார், மயிலர்;

மேலே தொடர்ந்து நடந்தோம்; வழுக்கியாற்றின் போக்கில் உப்புக்குளம் குறுக்கிட்டது. வழுக்கியாறு போகின்ற பாதையிலுள்ள பல குளங்களை இணைத்துக் கொண்டே செல்கின்றது; அக்குளத்தில் மாடுகள் பல நீர் அருந்திக் கொண்டிருந்தன. மனித சலசலப்பைக் கண்டதும் அவை ஒருகணம் எம்மை நிமிர்ந்து பார்த்தன.



'...நான்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகத்தார் குளத்தின் கரையில் குடையைக் ஆற்றினார். பின், குளத்து நீரையள்ளி வாய் கொப்பளித்து முகத்தைக் கழுவிக் கொண்டார்.

'முகம் எரியுது, தம்பி...! என்றபடி அப்பையரும் குளத்தில் இறங்கினார்.

# 6

வழுக்கி ஆற்றின் இருகரைகளிலும் நீர் இறைப்பு மேடைகள் காணப்படுகின்றன. ஆற்றில் நீர் பாயும்போது, வயல்களில் காய் கறிப் பயிர்கள் செய்கைபண்ணினால், நீர் குறைத்துப் பாய்ச்சுவார்கள். நீர் இறைப்பு மேடைகளைப் போலவே, ஆற்றின் படுக்கையில் குறுக்கு அணைகள், கதவுகளுடன் காணப்பட்டன.

தொடர்ந்து நடந்தோம். மெதுவாகக் களைப்பு மேலிடத் தொடங்கியது. தூரத்தில் ஆற்றுக்குக் குறுக்கே ஒரு வீதியும், அவ்வீதியில் பஸ் ஒன்று புகையைக் கக்கியபடி விரைந்து செல்வதும் தெரிந்தது.

'அதுதான் கந்தரோடை மாசியப்பிட்டி வீதி... அதோ தெரியுது கந்தரோடைக் குளம்...' என்றார் அப்பையர்.

கந்தரோடைக் குளம் மட்டும் தெரியவில்லை.

நான்கு கோயில்களும் தெரிந்தன. வழுக்கியாற்றின் இடது பக்கத்தில் அடுத்தடுத்து நான்கு கோயில்கள். கோயிலும் குளமும் வயலும்... மனிதனுக்கு வேறு என்ன தான் வேண்டும்.

'பிள்ளையார்... மீனாட்சி... நாகம்மாள்... கண்ணகை ஆகிய நான்கு கோயில்கள்... இவை! திருவிழாக்களும் நடைபெறுகின்றன. தம்பி! வழுக்கி ஆற்றின் போக்கில் மூன்று சிறப்புக்களைக் காணலாம்...' என்றார் அப்பையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வயல்கள்... கோயில்கள் .. ஆற்றின் போக்கில் நிரம்ப உள்ளன; மற்றையது எது...?' என்றேன்.

'மயானம்; சுடலைகளையும் போகிற பாதையில் காண லாம்...! அளவெட்டியில் ஆரம்பிக்கின்ற வழுக்கி ஆறு கந்தரோடை, கட்டுடை, நவாலி ஊடாக அராலிப் பாலத்தடியில் கடலுடன் சேர்கின்றது; அளவெட்டியில் இருந்து கட்டுடை வரை வயல்களும் கோயில்களும் காணப் படும்... கட்டுடைக்கு அப்பால் வயல்களும் சுடலைகளும் காணப்படும், வழுக்கி ஆறு நமக்கு ஓர் உலக உண்மை யைப் புலப்படுத்துகின்றது, தோன்றி வளர்ந்து இறைவனை மறக்காமல் வாழ்ந்து இறுதியில் மயானத்தை அடைந்தால், பேரின்பக் கடலை ஈற்றில் சேரலாம்...' என்று சிரித்தார், அப்பையர்.

'ஐயோ... என்ரை காலெல்லாம் வலிக்குது! உந்தக் கோதாரி மாட்டை எங்கையும் காணேம்,' என்ருர் மயிலர்.

கந்தரோடை மாசியப்பிட்டி வீதியின் வடபாகத்தில் சிறு குளம் ஒன்று இருக்கின்றது. அதில் துணி துவைத்துக் கொண்டிருந்தார்கள்; வீதிக்கு அப்பால் வழுக்கி ஆறு வளைந்து செல்கின்றது; ஒரு இருபது யார் தூரம் போனுல், பிளுக்கைக் குளத்தைப் போன்ற ஒரு குளத்தைக் காண லாம்.

வீதியின் தென்புறத்தே இருந்த சிறு குளத்தின் கரை யில் பெரிய மகிழமரம் ஒன்று படர்ந்து செழித்திருந்தது. சண்முகத்தார் மரத்தின் வேருடன் கவலை முகத்தில் தோய அமர்ந்திருந்தார்; ஏனையோரும் அவரைச் சுற்றி அமர்ந் திருந்தனர்.

'எங்கை போச்சுதோ?' என்ருர் முகத்தார்.

'கந்தரோடை முந்தி பெரிய இராசாக்கள் அண்ட பூமி... தலை நகராக இருந்திருக்குது.' என்ருர் மயிலர்.

'யாழ்ப்பாண அரசின் தலைநகராக ஒரு காலத்தில் இருந்திருக்கிறது... அன்னியர்... பாண்டியர் படையெடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கந்தரோடையில் இருந்து அரசாண்ட உக்கிர சிங்கன் என்ற மன்னன் தனது அரண்மனையில் இருந்த தங்கக்கட்டிகளை ஒரு பெட்டியில் அடைத்து ஒரு குளத் தில வெட்டித் தாட்டான் என்று ஒரு கர்ண பரம்பரைக் கதை இருக்குது...' என்றார் அப்பையர்.

'அது இந்தக் குளமோ?...' என்று ஆசை கண்களில் மின்ன மயிலர் கேட்டார்.

'அது இதுவல்ல... றோட்டுக்கு அப்பால் வயலுக்கை தெரியுற பெரிய குளம்' என்று கூறிவிட்டு என்னைப் பார்த்து அப்பையர் சிரித்தார். 'அந்தக் குளத்தில் ஒரு முறை மண்வெட்டியபோது ஒருவனுக்கு ஒரு தங்கக் கட்டி கிடைச்சதாம்...'

'ஆ...' என்று மயிலர் வாயைப் பிழந்தார்.

'உண்மைதானே?...' என்று செல்லத்துரை கேட்டான்.

சூரியன் உச்சி வானத்தை நெருங்கிக் கொண்டிருந் தான். மகிழ மரத்தடியில் அமர்ந்திருந்த மயிலர், வீதி யின் மதகுக்குள் எதையோ உற்று உற்றுப் பார்ப்பதைக் கண்டேன்.

'என்னவோ ஒன்று மதகுக்கை இருந்து என்னை உத்து உத்துப் பாக்குது, முகத்தார்...! எனக்குப் பயமா இருக் குது... பாம்பு கிம்போ...'

எல்லாரும் மதகைப் பார்த்தோம். இருள் படர்ந்து பற்றைகள் மண்டிக்கிடந்தன. கொள்ளிக் கண்கள்போல இரு விழிகள் விழிப்பதைக் கண்டோம். செல்லத்துரை பெரிய கல்லொன்றை எடுத்து வீசினான்.

'உர்...' என்ற உறுமலுடன் ஏதோ ஒன்று வெளியே தாவி, வீதியில் பாய்ந்து வழுக்கி ஆற்றுப் படுக்கையுள் குதித்து ஓடியது.

'நரி...!' என்றார், முகத்தார். 'நரியைப் பார்த்தால் அதிர்ஷ்டம்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓமோம்... நரி முகத்தில் விழித்தால் அதிர்ஷ்டம் தான்... மயிலண்ணை தான் முழித்தவர். தங்கக்கட்டி ஏதாவது கிடைக்கப்போகுதோ தெரியவில்லை ..' என்றார் அப்பையர்.

'கிடைக்குமே...?' என்றார், மயிலர் ஆசையுடன்.

'மாட்டோ...? அது கிடைக்கும்..!' என்றேன், நான்.

# 7

கந்தரோடைப் பெரிய குளத்தில் நீரே இல்லை. பசும் புல்தான் வளர்ந்திருந்தது. நாங்கள் குளத்தினுள் இறங்கியதும் புளுக்கள் பல விர்ரென்று புற்களுக்கிடையே இருந்து வானில் கிளம்பின. ஆட்காட்டிப் பறவையொன்று ஓயாது கத்தியபடி எங்களைத் தொடர்ந்தது.

தூரத்தில் சிவப்பு மாடு ஒன்று மேய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'அதோ... வடக்கன் சிவலை..!' என்று அதை நோக்கி மயிலர் ஓடினார். வெகு வேகமாக ஓடினார்.

'கோதாரியிலை விழுவானே அது பசுமாடடா?' என்று முகத்தார் கத்தினார். வேகமாக ஓடிய தரகர் திடீரென நின்றார். குனிந்து எதையோ 'பட்'டென எடுத்து தனது கைப்பையுள் வைத்ததை நானும் செல்லத்துரையும் கண்டோம்.

'தங்கக் கட்டியோ?... 'என்று சந்தேகத்தோடு செல்லத்துரை கேட்டான்.

'நீரும் நம்புறீரே?...' என்றேன் நான்.

'நம்பக் கூடியது தான்...' என்றான் செல்லத்துரை.

மயிலர் திரும்பி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் வீட்டை போகப்போறன்... முகத்தார்! என்னாலை இனி நடக்கேலாது .....!' என்றார், செல்லத்துரை என்னைப் பார்த்தான் எனக்கும் இறிது சந்தேகம்.

'வந்தனி, கடைசி வரைவா... போற வழியிலை கொட்டில்கள் வரும்... அடிக்கலாம்...' என்றார் அப்பையர்.

'எதையோ குனிஞ்சு எடுத்தாய்... என்ன?' என்று செல்லத்துரை கேட்டான்.


'அதையேன் உனக்கு...! பொயிலை விழுந்தது எடுத்துப் பையுள் வைச்சனான்...' என்றார், மயிலர்.

'காட்டும் பாப்பம்...' என்றான், செல்லத்துரை.

'உனக்கு ஏன் நான் காட்டுவான்..' உனக்கும் எனக்கும் கதையில்லை, கண்டியோ...?' என்று முன்னால் போன சண்முகத்தாருக்கு அருகே விரைந்து சென்றார், மயிலர்.

'தம்பி, தரகனுக்கு அதிர்ஷ்டம் அடிச்சுத்தான் இருக்குது; விடக் கூடாது...' என்றான். செல்லத்துரை.

வழுக்கி ஆறு வயல்களுக்கு ஊடாக வறண்டு கிடக்கிறுள். நவாலி மட்டும் அந்த வறட்சி நீங்கி விடவில்லை. வயல் கிணறு ஒன்றில் நீர் அள்ளிப் பருகிவிட்டுப் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். வழியில் நின்றவர்களிடம் மாட்டைப் பற்றி, சண்முகத்தார் விசாரித்தார்.



'உதாலே மாடு போனது...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலைக் காளை ஒன்று தென்புறமாக, வழுக்கி ஆற்றி னூடாகச் சென்றதாகத் தகவல் கிடைத்தது.

சிவலைக் காளை பற்றிய தடயம் ஒன்று கிடைத்ததால சண்முகத்தார். மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்.

'ஓய், மயிலர்... நீர் ஏன்காணும், உவன் செல்லத் துரைக்கு இந்த வேலை செய்தனீர்? உம்மை நம்பியெல்லே வந்தவன்...' என்று மயிலரைக் கேட்டார், அப்பையர்.

'அப்பையர்... நீர் கூட இப்பிடிக் கேக்கிறாய்... சிவசத் தியமாச் சொல்லுறன். கலியாணம் முடியுமட்டும் பொம் பிளை பிள்ளைத்தாச்சி என்ற விஷயம் எனக்குத் தெரி யாது... உவன் செல்லத்துரைக்கு நான் கலியாணம் பேசாத இடமே? உவனைப் பற்றிக் கேள்விப்பட்ட எவனும் பொம்பிளை கொடுக்க மாட்டன் எண்டபிறகு...உந்தச் சம்பந்தம் வலிய வந்துது... செல்லத்துரையனும் காலையும் மாலையும் எனக்குப் பின்னாலை 'அம்மான் அம்மான்' என்று திரிஞ்சான்... எப்படியாவது இதையாவது முடிச்சுக்கிப் போடு என்றான்...! விசாரிக்க விட்டானே? செய்து வைச் சன்... அவள் ஐஞ்சு மாதத்திலை பிள்ளை பெத்ததுக்கு நானென்ன செய்யுறது...! இப்ப உவன் குடும்பத்தைக் கைவிட்டிட்டு என்னைக் கறுவிக் கொண்டு திரியுறான்...'

'நீ செய்யக் கூடியனிதான்... என்னையும் ஒருக்காக் கொண்டுபோய் விழுத்தப்பாத்தனி தானே...' என்றார் முகத்தார்.

'உவன் செல்லத்துரையன்ரை சம்பந்தச் சீர் கேட்டுக் குப் பிறகு கலியாணத் தரகையே கைவிட்டிட்டன்... அதுக் குப் பிறகுதான் மாட்டுத்தரகு செய்யப் புறப்பட்டனான்' என்றார் தரகர். 'இஞ்சைபார்... மாடு சூப்பின பனங் கொட்டை கிடக்குது சிவலைதான் சூப்பி இருக்க வேணும்...'

நான்கு மைல் தூரத்துக்கு மேல் நடந்திருப்போம்: வடக்கன் சிவலையைக் காணோம்.

வழுக்கி ஆற்றின் மார்பிலே கால் பதித்து நடந்தோம்: செல்லத்துரையின் விழிகள் மயிலரின் கைப் பையிலேயே நிலைத்து நின்றதை நான் கண்டேன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

கந்தரோடைக் குளத்தை விட்டு, வழுக்கி ஆற்றின் படுக்கையில் நடந்தோம். பல கமக்காரர் பூவரசங் குழையை வயல்களுக்குப் பசளையாக இட்டுக் கொத்தி மண்ணைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள். இந்த இடத்தில் வயல் வெளி குறுகி, பனைவடலிகளாகக் காட்சி தந்தது. வெயில் கடுமையாக இருந்தது. வயல்களில் ஆங்காங்கே கிணறுகளுக்கு அருகே செழித்து வளர்ந்திருந்த பூவரச மரங்கள் நிழல் தந்தன.

'என்ன தம்பி, பேசாமல் வாறாய்...?' என்று மயிலர் என்னிடம் கேட்டார்.

'அப்படி எதுவுமில்லை, அம்மான்...! மாடு கிடைக்குமே?... ஆராவது பங்கு போட்டிருந்தால்..?' என்றேன்.

'சாச்சாய்... இளம் காலை கண்டியோ..? இன்னும் அதுக்கு ஒன்றும் செய்யவில்லை அதனுலை மாடு தேடிப் போயிருக்கும்... இங்கினேக்கைதான் நிக்கும்...'

''உதென்ன அம்மான், உங்கடை தோளிலை குடையின்ரை கைப்பிடி மட்டும் தொங்குது... குடையைக் காணேல்லை...' என்றேன்.

திடுக்கிட்டுப்போன மயிலர், தோளில் மாட்டியிருந்த குடையை எடுத்தார். கைப்பிடி மட்டுந்தான்.

'ஐயோ... என்ரை குடை... எங்கையோ விழுந்திட்டுது... முகத்தார், முகத்தார்! குடையைக் காணேல்லை.. என்ரை குடையைக் காணேல்லை...'

'மாட்டைக் காணேல்லை என்று போறம்... நீ குடையைக் காணேல்லை என்கிறாய்?...' என்றார் சண்முகத்தார்.

'என்ரை மனுசிக்கு நான் என்ன பதில் சொல்லப் போறன்! பேசப் போறாளே? வழிக்கு வழி சொல்லிவிட்டவள்.. சாமான்களைத் தொலைச்சுப் போட்டு வராதையுங்கோ என்று..' என்று மயிலர் பிரலாபித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உது உன்ரை குடையே, மயிலர்!...' என்று கைப் பிடியில்லாத பழம் குடை ஒன்றை அப்பையர் நீட்டினார்.

'ஓமோம்...!' திரவியம் கிடைத்த ஆவல் மயிலருக்கு.

'கோதாரி விழுவான் பழங் குடைக்கு இப்படி அழு கிருன்...' என்றபடி தரகரின் கனமான பையைப் பார்த் தான் செல்லத்துரை; பசிப் பார்வை அது.

'எனக்குச் சாதுவா நெஞ்சுக்கை வலிக்குது...' என்ருர், சண்முகத்தார்.

'நடந்த களைப்பு... காலமை தொடக்கம் ஒன்றும் சாப்பிடவுமில்லை!' என்ருர் அப்பையர்.

'என்ன அம்மான், என்ன?' என்று பதறினேன், நான். சண்முகத்தாருக்கு அடிக்கடி நெஞ்சுவலி வருவது வழக்கம்; 'திரும்பி விடுவோமா?''

'என்ரை மாட்டைக் கண்டு பிடிக்காமல் திரும்ப மாட் டேன்... எனக்கு இப்பசரி, தம்பி!...' என்று முகத்தார் நடந்தார்.

மேலும், ஒரு மைல் தூரம் நடந்தோம்; வழுக்கி ஆறு வறண்டுதான் கிடக்கின்றது; படுக்கையில் பற்றை கள் வளர்ந்து காய்ந்து கிடந்தன. ஆங்காங்கே வெள்ளத் தோடு அள்ளுப்பட்டு வந்து காய்ந்து கிடக்கும் பீர்க்குகள்.

'இணுவில் சுப்பிரமணியத்திட்டை மை போட்டுப் பார்த்திருக்கலாம்... மாடு போனவழியை உடனே சரியா கக் கூறியிருப்பார்...' என்ருர் மயிலர்.

'நீர் தானே சிவலை மாடு வழுக்கி ஆற்றுக்குள்ளாலை இறங்கிப் போனதைக் கண்டதாகக் கூறினனீர்...' என்று மடக்கினுர், அப்பையர்.

'தரகர் மாசியப்பிட்டிக் கனகம்மாட்டைப் போட்டு, விடியப்பறமாக வயலுக்குள்ளாலை ஒளிச்சு வந்திருப்பார்... அந்த மயக்கத்திலை மாடு போனதுபோல இருந்திருக் கும்...' என்ருன், செல்லத்துரை.

'விஷர் கதை கதையாதை...!' என்ருர் மயிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டங்காகம் ஒன்று தரகரின் தலைக்கு மேலால் கரைந்தபடி பறந்தது. ஆட்காட்டிக் குருவி ஒன்றும் கீச்சிட்டது.

'மயிலரம்மானுக்குச் சாத்திரத்திலை வலு நம்பிக்கை போல...!' என்றேன்.

'உவருக்கு எதிலைதான் நம்பிக்கையில்லை...!' என்றான் செல்லத்துரை. அவனை எரித்து விடுவதைப்போல மயிலர் பார்த்தார்; 'இஞ்சை உந்தப் பையைத் தாவன் தரகர்... நான் கொண்டுவாறன்...'

'நீ எனக்குப் பரிய வேண்டாம்... என்ரை பையைத் தூக்கிவர எனக்குத் தெரியும்... நீ என்ன தம்பி கேட்டனீ...? ஓ... ஓம்... எனக்குச் சாத்திரத்திலை வலு நம்பிக்கை.. சாத்திரப்படிதான் எனக்கு எல்லாமே நடக்குது... என்ரை கிரகப்படி ஒரு மனுசி... எட்டுப் பிள்ளை! அதன்படி எல்லாம் சரி...' என்றார் தரகர்.

'அது சரி, தரகர்... ஊருக்குள்ளை உமக்கு இரண்டு மூன்று பிள்ளையள் இருக்கே... அது கணக்கிலை இல்லையே?' என்று சிரித்தான் செல்லத்துரை.

'குறுக்காலை போவான்' என்று திட்டினார் மயிலர்.

'நீர்தான் குறுக்காலை போனனீர்...!' என்றான் செல்லத்துரை.

# 9

பிற்பகல் ஒரு மணி. நீண்ட தூரம் நடந்த களைப்பு ஒவ்வொருவரிலும் தெரிந்தது. போகிற வழியில் விசாரித்த போது சிவப்புக்காளை ஒன்று வழுக்கி ஆற்றுப் படுகையால் நடந்து போனதாக அடையாளம் கூறினர். சங்குவேலிக் குளத்தில் இருந்து தோற்றம் பெறுகின்ற சிறு


வாய்க்கால் ஒன்று வழுக்கி ஆற்றுடன் இணைகின்றது. இணையும் இடத்தையும் தாண்டி நடந்து சென்றோம். தூரத்தில் சங்குவேலி - கட்டுடை வீதி தெரிந்தது. அதனையும் கடந்து நடந்தோம்.

'அதோ... ஐந்துகண் மதகு தெரியுது...' என்று சுட்டிக் காட்டினார், அப்பையர்.

'நாங்கள் அளவெட்டியில் இருந்து மானிப்பாய் வரை வந்துவிட்டோம்...' என்றேன்.

'வழுக்கி ஆற்றின் பாதையில் குறுக்கிடும் பெரிய மதகு இதுதான்!... மானிப்பாய் - சித்தன்கேணி றோட்டிலை இருக்குது... கட்டுடை மதகு என்றும் சொல்லுறது... இந்த மதகில் ஐந்து வாசல்கள் இருக்குது... வெள்ளம் பாயும் போது குபுகுபுவெனப் பாயும்... வேகமாகப் பாயும்...'

'மதகுக்கை பார், முகத்தார்!... சிவலை சிலவேளை மதகுக்கை நிக்கும்.' என்றார், மயிலர். மதகுகளுள் முகத்தார், மயிலர், செல்லத்துரை ஆகியோர் புகுந்து பார்த்தனர்.



ஐந்துகண் மதகுக்குள்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கன் சிவலையைக் காணோம்!

முகத்தாரின் முகத்தில் கவலையும், வாட்டமும் குடி கொள்ளத் தொடங்கின; நம்பிக்கை வறட்சி.

ஐந்து கண் மதகுக்கு அப்பால், வழுக்கியாற்றின் போக்கில் சில மாறுதல்கள் புலப்படுகின்றன. வழுக்கியாற்றின் படுக்கை இரு மடங்காக அகலிக்கின்றது. அத்துடன் ஆற்றின் இருமருங்கும் வயல்களோடு, குடியிருப்புகளைக் கொண்ட தென்னந் தோட்டங்கள் காணப்படுகின்றன.

நதிப்படுக்கையில் நடந்து சென்றோம். மேற்கே திரும்பிப் பின் தென்புறமாக ஆறு போகின்றது. ஆற்றுப் படுக்கையில் ஊர்க்கோழி ஒன்றைப் பங்குபோட்டுக் கொண்டிருந்த மூன்று நாய்கள் எங்களை ஒருகணம் நிமிர்ந்து பார்த்து விட்டுத் தமது வேலையில் ஈடுபட்டன.

எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த மயிலர், நாய்களைக் கண்டதும் 'சூய்' என்று குடையை ஓங்கினார்; அவ்வளவுதான்... ஒரு நாய் அவரை நோக்கிப் பாய்ந்து வந்தது;

'ஐயோ...' என்றபடி குடையால் ஓங்கி எறிந்தார். 'அடீக் அடீக்...' என்றபடி தனது பையையும் ஓங்கி எறிந்தார்; நாய் நிற்காது ஓடிவந்தது. வேறு வழியில்லை... தரகர் ஓடத் தொடங்கினார்.

'ஐயோ... ஐயோ...!' தரகர் ஓடினார். நாம் செய்வதறியாது திகைத்து நின்றோம்;

நல்லவேளை எதிர்ப்புறமாக மண் ஏற்றிக் கொண்டு, ஆற்றுப் படுக்கையால் ஒரு றக்டர் வந்தது; றக்டரின் சத்தத்தைக் கேட்ட நாய், வயலுக்குள் பாய்ந்து ஓடி விட்டது. தரகர் வரம்பிலே குப்புற விழுந்தார்.

நாங்கள் ஓடிப்போய்த் தரகரைத் தூக்கினோம்.

'நரிமுகத்திலை விழிச்சனை... நாய் கடிக்கப் பாத்துது... [illegible] விசர்நாய்... நாக்கைத் தொங்கப் போட்டபடி ஓடிச்

கது... ஏதோ, கட்டுடை சிரணி அம்மன்தான் இண்டைக்கு என்னைக் காப்பாற்றினுள்...' என்ருர் தரகர்.

தூரத்தில், வயல்களுக்கு அப்பால் ஒரு கோயில் தெரிந்தது; கட்டுடை சிரணியம்மன் கோயில். இருந்தாற்போலத் தரகர்—

'ஐயோ! என்ரை பை... என்ரை பை... அந்தா செல்லத்துரையன் கொண்டு போருன்...' என்று கத்தியபடி வயல் வரம்பில் ஓடத் தொடங்கினர். தூரத்தில் செல்லத்துரையன் வரம்பில் அமர்ந்து, தரகரின் பையைச் சோதனை போடுவது தெரிந்தது.

நாமும் விரைந்து போனேம்.

'தெரியாமல் இவங்களைக் கூட்டிக் கொண்டு வந்திட்டன்...' என்ருர் சண்முகத்தார்.

ஓடிப்போன மயிலர் 'படக்'கெனப் பையைப் பறித்தார். செல்லத்துரையும் பேசாமல் பையைக் கொடுத்து விட்டான்.

'பேய் மனிசன்... பழம் செருப்பொன்றைப் பையிலை காவி வருகுது...' என்ருன்.

மயிலர் அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்தார்.

'இந்த றப்பர்ச் செருப்பு கந்தரோடைக் குளத்திலை கிடந்தது... என்னட்டை இருந்த றப்பர்ச் செருப்பிலை ஒன்று எக்கச் சக்கமாக அறுந்துபோச்சுது .. இது அதுக்குச் சோடிபோல இருந்துது... அதுதான் பையிலை எடுத்து வைச்சனுன்...!' என்ருர், மயிலர்.

'நான் வேறேதோ என்று நினைச்சன்' என்ருன் செல்லத்துரை.

'மாடு எங்கை போச்சுதோ?' என்றபடி, சண்முகத்தார் வழியில் குறுக்கிட்ட குளக்கரை ஒன்றில் தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டார். தரகர் புகையிலையைச் சுருட்டியபடி கூட அமர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்காலை பனை வடலி தெரியுது .. வாறியே முகத்தார்! போட்டு வருவம்... ஒன்று இரண்டைப் போட்டால் நல்லா இருக்கும்...'

'என்ரை மாட்டைக் கண்டு பிடிக்காமல் நான் தண்ணி குடிக்கமாட்டன்...' என்றார் முகத்தார்.

போகப் போக ஆற்றுப் படுக்கை அகலமாகிக் கொண்டு வந்தது; ஆற்றுப் படுக்கையில் வளர்ந்திருந்த புற்களை வெட்டிச் சாக்குகளில் நிரப்பி, ஒற்றை மாட்டு வண்டிகளில் சில பெண்கள் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

'என்ரை சிவலை மாட்டைக் கண்டியளோ?' என்று முகத்தார் கேட்டார். ஆவேசமும், கவலையும் குரலில் தொனித்தன.

தூரத்தில் இரண்டு சிறு கல் கட்டிடங்களும் ஓடு வேய்ந்த உயர்ந்த மடம் ஒன்றும் தெரிந்தன. ஓடு வேய்ந்த மடத்தினுள் ஏதோ கொழுந்து வீசி எரிந்து கொண்டிருந்தது



'பனை வடலி தெரியுது வாறியே...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றிலே மெல்லிய பிணவாடை.

'நான் இனி உங்காலே சிவ சத்தியமா வர மாட்டன்...' என்றார் மயிலர்.

# 10

ஐந்நூறு யார் தூரத்தில் நவாலி வீதி தெரிகின்றது. அதற்கிடையில் வழுக்கி ஆற்றின் படுக்கை மணல் வெளியாகப்பரந்து கிடக்கின்றது. ஆங்காங்கே சுடலை மடங்கள் தெரிகின்றன.

நவாலிச் சுடலை ஒன்றில் பிணமொன்று கொழுந்து விட்டெரிவது தெரிகின்றது. அளவெட்டியில் இருந்து இது வரை வயல்களையும் கோயில்களையும் கண்டு வந்த நமக்கு, மணல் வெளியும், மயானமும் மனதுக்கு ஒருவகைப் பிரமையைத் தோற்றுவிக்கின்றன.

'நடவும் மயிலர்...!' என்றான் செல்லத்துரை. 'நடக்க மறுத்தால் அதோ, எரியுதே பிணம்... அதிலை உம்மைத் தூக்கிக் கொண்டு போய்ப் போடுவன்...' என்று கடகட வெனச் சிரித்தான்.

மணல் படுக்கையில் நடந்து போறோம். வெயிலின் கொடுமை; சுடுமணல் கால்களைச் சுடுகின்றன.

'என்ன வாழ்வு... கொஞ்ச நாட்களுக்கு எத்தனை ஆட்டம் ஆடுறம்... கடைசியிலை ஒரு பிடி சாம்பல்... நீ பெரியவன், நான் பெரியவன்... என்று எத்தனை ஆணவம்...' என்றார், அப்பையர்.

சண்முகத்தார், மயிலர், அப்பையர் மூவரும் முன்னால் நடக்கின்றார்கள், செல்லத்துரையும் நானும் பின்னால் மெதுவாக நடக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையின் உடல் மெதுவாகப் பதறுவது போல எனக்குப் படுகின்றது; இது வரையில் முகத்தில் இல்லாத கடூரம் முகத்தில் படர்ந்தது போலவும் தெரிகின்றது.

மடிக்குள் இருந்து சிறு போத்தல் ஒன்றை எடுத்தான்; போத்தலுடன் கத்தி ஒன்றும் மணலில் விழுந்தது. அதை உடன் எடுத்து மடியில் வைத்துக் கொண்டான்; போத்தலைத் திறந்து விறு விறெனக் குடித்து விட்டு, தூர வீசி எறிந்தான்.

''செல்லத்துரை, இது என்ன...?' என்றேன்.

''சாராயம் தம்பி!... கவலை வந்தால் குடிப்பேன்... பழி வாங்கும் எண்ணம் வந்தால் என்னை மறக்கக் குடிப்பேன்...' என்முன்;

மெதுவாகச் சிறிது தூரம் நடந்தோம்.

'தம்பி... இந்தச் செல்லத்துரையைச் சண்டியன் என்று நீ கேள்விப்பட்டிருப்பாய்... ஆனு, என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது என்ரை வாழ்க்கையிலை எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம்தான்... நானும் மற்றவர்களைப்போல நல்லா வாழத்தான் ஆசைப்பட்டன்... ஆனு, இந்த மயிலர் என்னைப் பாழுங் கிணற்றிலை தள்ளிவிட்டிட்டான்... தம்பி! உனக்குத் தெரியத்தான் வேணும்! மாசியப்பிட்டியிலை கனகம்மா என்று ஒருத்தி இருக்கிறு: அவ தரகத்தை வைப்பு... அது எனக்கு அப்ப தெரியாது...! கனகம்மாவின் மகளைத்தான் நான் கலியாணம் செய்தன்.. அப்பெண் பிள்ளைத்தாச்சி என்று தெரிந்ததும், எனக்கு அதை மறைச்சு, அவளை மயிலர் கட்டி வைச்சார்... உண்மை தெரிந்ததும் நான் திகைத்தன்...! ஏமாந்து போனதை உணர்ந்தன்! அன்றையில் இருந்து என்ரை வாழ்வு வீணுப் போச்சுது. அவளோடை... நெறிதவறிய அவளோடை எப்படி நான் வாழ்வது? அவளை நெறிதவற வைத்து ஏமாற்றியவனை எப்படி யாவது கண்டுபிடிக்க வேணும் என்ற ஆவல்தான் எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது இருக்குது... அவளைப் பல தடவை கேட்டேன்! சித்திரவதை செய்து கேட்டேன்! யார் என்று கூற மறுத்து விட்டாள் யார் என்று மயிலருக்குத் தெரியும்... அறியாமல் இன்று விடப்போவது மில்லை...!' என்று செல்லத்துரை உறுமினான்.

நான் செல்லத்துரையை நிமிர்ந்து பார்த்தேன். அவனுக்காக இரங்கத்தான் என்னால் முடிந்தது.

'இன்றைக்குப் பழி தீர்ப்பேன்...' என்றான் செல்லத்துரை. எனக்குத் திகிலாக இருந்தது.

சூரியன் மேற்கே சரியத் தொடங்கினான்.

நவாலி வீதியில் ஏறி நின்று தெற்கே பார்த்தோம். அற்புதமான காட்சி. உண்மையில் இதுவரை வறண்டு காட்சி தந்த வழுக்கி ஆறு நீர் நிறைந்து நெளிந்து வளைந்து ஓடுவது தெரிகின்றது!

'இதிலிருந்து, வழுக்கி ஆற்றில் வருடத்தில் பெரும்பாலும் நீர் இருக்கும்... ஆனால், இது உப்புநீர். கடல் நீர்...' என்றார் அப்பையர்.

சண்முகத்தார் வீதியில் இருந்து, கீழே ஆற்றுப்படுக்கையில் இறங்கினார். ஆற்றங்கரையோரமாக நடந்து போனோம். ஆடி அசையாத நீர்; உவர் நீர். நீண்ட தூரம் தென்புறமாக ஒடுங்கி வளைந்து செல்வது தெரிகின்றது.

சண்முகத்தார் அடிக்கடி மார்பைத் தடவிக்கொள்வதை அவதானித்தேன் நதியின் இருமருங்கும் கடல் தாவரங்கள் வளர்ந்து மண்டிக் கிடந்தன. இக்காட்சியை வழுக்கி ஆறு கடலோடு கலக்கும் அராலிப்பாலத்தடி வரையில் காணலாம்.

நடந்து சென்றோம். நதிக் கரையில் மாடுகள் போன அடையாளம் தெரிகின்றன. இருந்தாற்போல...


5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எளிய மயிலா...!' என்று மடியில் இருந்த கத்தியை உருவினான் செல்லத்துரை.

'நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கிறன். ஆரடா எளிய வடுவா...!' என்று மயிலர் 'கொடுக்கு'க் கட்டினார்: 'கனக்கக் கதைச்சியெண்டால்... இந்த மயிலனைப் பற்றி உனக்குத் தெரியவில்லை'.

மயிலர்மீது செல்லத்துரை பாயப்போனான்; மயிலர் குடையை ஓங்கினார்; நல்லவேளை சண்முகத்தார் செல்லத்துரையைக் கட்டிப் பிடித்துவிட்டார்!



'எளிய மயிலா...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

வழுக்கி ஆற்றின் கரைகளில் இறந்து காய்ந்த மீன் குஞ்சுகள் ஆயிரக்கணக்கில் கிடக்கின்றன. ஆற்று நீர் வற்றும்போது இறந்து போனவையாக இருக்கவேண்டும். பட்சிகள் தின்று எஞ்சியவை.

வடக்கன் சிவலையைக் காணோம்.

மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்த எனக்கு, இருந்தாற்போல மயிலரின் அபயக் குரல் கேட்டது.

'ஐயோ...என்னைக் கொல்லுறான்...'

குரல் வந்த திக்கில் ஓடிப்போனேன். முன்னே நடந்து கொண்டிருந்த முகத்தாரும் அப்பையரும் நின்று திரும்பிப் பார்த்தனர்.

ஒரு பற்றையின்மீது மயிலர் விழுந்து கிடந்தார்; அவரின் மேல் ஏறி இருந்தபடி, செல்லத்துரை கத்தியை ஓங்கியபடி கேட்டான்.

'ஆர் அவன்... சொல்லு...!'

'சொல்லுறன்... என்னை விட்டிடு... நான் பிள்ளை குட்டிக்காரன்...' என்று மயிலர் கெஞ்சினார்; நான் நெருங்கி ஓடினேன்.

'தம்பி.. நான் குத்தமாட்டன்... நில்...! தரகன் உண்மையைச் சொன்னால் விட்டிடுவன்... சொல்லு, ஆர் அவன்...!'

தரகர் விம்மினார்:

'எங்களோடு வாறவையில்லை ஒருவன்...'

நான் விழிப்புற்றேன்:

'நீயா?...'

'இல்லை... நானில்லை...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்ப .. தம்பியா?...'

'இல்லை... இல்லை...'

'கெதியாச் சொல், அப்புக்காத்து அப்பையரு...?'

'இல்லை... அவரும் இல்லை...'

விருட்டென்று எழுந்தான். செல்லத்துரை.


'அப்ப... அவரா... அவனு?...'

கரிக்குருவி ஒன்று உச்சிவானில் ஓலமிட்டபடி எழுந்தது.

செல்லத்துரை 'திக்' பிரமை பிடித்து ஒரு கணம் நின்றுன்;

'தம்பி... தம்பி... ஓடிவாருங்கோ... சண்முகத்தார் விழுந்து போனுர்... பேச்சு மூச்சில்லை...' என்று அப்பையர் கத்தும் சத்தம் கேட்டது. விரைந்து போனேம். தள்ளாடித் தள்ளாடிச் செல்லத்துரை வந்தான்.

நதி மருங்கில் உடல் வெள்ளத்தில் கிடக்க, சண்முகத்தார் கிடந்தார்;



'நதி மருங்கில் கதை முடிந்தது!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கால் கழுவப் போனார்... இருந்தாற்போல...' என்றார் அப்பையர்.

'ஐயோ... என்ரை முகத்தார்...!' என்று ஓலமிட்டார் மயிலர்.

ஆதவன் அடிவானில் சரிந்து கொண்டிருக்கின்றான்: தூரத்தில், வழுக்கி ஆறு கடல் அரசனோடு இணையும் காட்சி தெரிகின்றது: அராலிப்பாலம் மாலைக் கதிர்களில் மின்னுவது, கடல் பற்றைகளுக்கு மேலால் தெரிகின்றது;

சண்முகத்தாரைத் தூக்கிக் கரையில் வளர்த்தினோம்!

'அதோ...'; என்று செல்லத்துரை கூவினான்: 'வடக்கன் சிவலை...!'

அராலிப் பாலத்துப் பக்கம் இருந்து, ஒரு சிவப்புக் காளை ஆடி அசைந்து, வழுக்கியாற்றின் கரையாக வருவது தெரிகின்றது! தனது நீண்ட பிரயாணத்தை முடித்துக் கொண்டு, அது வீட்டிற்குத் திரும்புகிறது. போலும்!

அன்னையே, வழுக்கி அம்மா, உன் மார்பின்மீது ஈவிரக்கமின்றி கொடிய பா[illegible]கள் சிலர் நடந்தார்கள்! மன்னித்துவிடு...

வாழி... நீ!

'சிரித்திரன்' 1971



**இக்கதையில் பங்குகொண்டோர்:**

| | | |
|---|---|---|
| முகத்தார் | — | சி. லோகநாதன் |
| மயிலர் | — | இ. பற்குணம் |
| செல்லத்துரை | — | எஸ். ரி. அரசு |
| அப்பையர் | — | ஆர். இலங்கேஸ்வரன் |

*புகைப்படங்கள்*

'போட்டோ இலங்கேஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரை

வரைவிலக்கண அளவு கோல்களைக் கொண்டு இச் சிறு நூலினை அளவிட முயல்பவர்கள், தயவுசெய்து ஒதுங்கிக் கொள்ளவும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாய்கின்ற ஒரேயொரு நதியான வழுக்கியாற்றைப் பற்றிய சில தகவல்களை இந்நூலிலிருந்து அறிய முடிந்தால், அதுவே இந்நூலின் பயன்; தகவல்களை வறட்சியாகக் கூறாமல், அச் சூழலிற்குப் பொருத்தமான கதையினூடாகச் சொல்வது ஒன்றும் புதிய விடயமன்று. அதைத்தான் இதில் நான் செய்திருக்கின்றேன்.

விமர்சன விக்கிரகங்களை ஆராதனை செய்வதற்கு இந் நூல் வலுவற்றது. ஆனால், வாசகப் பெருமக்களைத் திருப்திப்படுத்துவதில் இக்குறுநூல் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றதென்பது, இது வெளிவந்த 1971ஆம் ஆண்டுக் காலகட்டத்திலிருந்து இன்றுவரை, பன்னிரண்டாண்டுகளாகப் பரவலாகப் பேசப்படுவதிலிருந்து புரிந்துகொள்ள முடிந்தது; பலர் வழுக்கியாறு குறித்து அறிய விழைந்தார்கள். எனவே, இந்நூலை 'சிரித்திரன்' பிரசுரத்தினர் நூலாக்கியுள்ளனர்; அவர்களுக்கு நன்றி.

— செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்

- நந்திக்கடல்
- ஆச்சி பயணம் போகிறாள்
- அலைகடல்தான் ஓயாதோ?
- சித்திரா பௌர்ணமி
- முற்றத்து ஒற்றைப்பனை
- இதயமே அமைதிகொள்
- கொத்தியின் காதல்
- வாடைக்காற்று
- பிரளயம்
- செங்கை ஆழியான் கதைகள்
- இரவின் முடிவு
- காட்டாறு
- கங்கைக்கரை ஓரம்
- யானை
- கனவுகள், கற்பனைகள், ஆசைகள்
- ஒரு மைய வட்டங்கள்
- காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
- அக்கினிக் குஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாதா மலடி
என்று பெயர் கேளாமல்
சத்திரசிகிச்சை மூலம் பெற்றெடுத்த
குழந்தை அது.
அதைப்பற்றி
யார் கவனித்தார்கள்?
சிலர் ஒருவரியில்
பாடியிருக்கிறார்கள்.
செங்கை ஆழியான்
அருமையாக
சிறுநூல் அளவிற்கு
நல்ல சித்திரமாக வல்லவா
தீட்டியிருக்கிறார்?

இரசிகமணி கனகசெந்திநாதன்
*அக்கினிக்குஞ்சு முன்னுரையில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org